மன வானில் தினம் பெய்யும் மழையே
எங்கள் மனதோடு உயிர் வாழும் நினைவே
மனக்கோயில் உமக்காகத்தானே
உம்மை மனம்போலே தொழுவோமே நாமே

ஓடும் மேகங்களே நினைவு ப+க் கொண்டு தாருங்களே
வாழும் சொந்தங்களே வந்து நினைவினை கூறுங்களே

ஆகுதியானவர் சோகங்கள் நெஞ்சில் வருவது இயல்பாகும்
இனம் சாகும் வரையின சாகா வரையினில் சாதனை இதுவாகும்

மன வானில் தினம் பெய்யும் மழையே
எங்கள் மனதோடு உயிர் வாழும் நினைவே
மனக்கோயில் உமக்காகத்தானே
உம்மை மனம்போலே தொழுவோமே நாமே

நள்ளிரவில் நடு அறையில் தனியே நாமிருந்தழுவோம் உம் நினைவில்
கல்லறையில் உங்கள் துயில்லறையில் நீங்கள் நினைப்பீரா எம்மை உம் மனதில்
தொடமுடியாப் பெரும் தொலைவினிலே உம்மை தொரைத்து விட்டோம் பெரும் போரினிலே
சுடர் ஒளியாய் உம்மை தொழுதிடவும் இருந்து சுதந்திரம் இல்லை வாழ்விலிலே

ஆகுதியானவர் சோகங்கள் நெஞ்சில் வருவது இயல்பாகும்
இனம் சாகும் வரையின சாகா வரையினில் சாதனை இதுவாகும்

மன வானில் தினம் பெய்யும் மழையே
எங்கள் மனதோடு உயிர் வாழும் நினைவே
மனக்கோயில் உமக்காகத்தானே
உம்மை மனம்போலே தொழுவோமே நாமே

எம் தெருவில் மரணிணலில் தனியே நீ இருந்து அழைப்பீர் உம்மருகில்
உம் குரலை எம் செவிகள் இன்னும் சேர்க்க தவிக்குது ஊர் மடியில்
அலையலையாய் வரும் நினைவினிலே உள்ளம் அந்தரிக்கும் அந்த துயரினிலே
இலைமறைவாய் எண்ணி அழுதிடக் கூட முடியவில்லை தமிழீழத்திலே

ஆகுதியானவர் சோகங்கள் நெஞ்சில் வருவது இயல்பாகும்
இனம் சாகும் வரையின சாகா வரையினில் சாதனை இதுவாகும்

மன வானில் தினம் பெய்யும் மழையே
எங்கள் மனதோடு உயிர் வாழும் நினைவே
மனக்கோயில் உமக்காகத்தானே
உம்மை மனம்போலே தொழுவோமே நாமே